All kinds of Velona
Products
* Banians Ladies Vests
* Panties Baby Suits
Etc Etc
'ARTHE Group''
Contact:
Arthe Jewellers
(Pvt) Ltd
111, Kasturiar Road,
JAFFNA. T'Phone: 23628

Registered as a Newspaper

Malhu Branch Library

உதயன்

விலை ரூ.1/-

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

தரமான Velona
தாராளமாய் யாழ்நகரில் பெற்றுக்கொள்ள
இன்ற நாடுகளுள்
'ARTHE GROUP'
தொடர்பு கொள்க:
ஆர்த்தி ஜுவல்லர்ஸ்
(Pvt) Ltd.
111, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்
தொலைபேசி: 23628

கடிதம்:- 1 யாழ்ப்பாணம் அக்ஷய ஆடி மீ 7 உ புதன்கிழமை ஹிஜ்ரி 1406 ஜூலைக் பிறை 15 (23-07-1986) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர்:- 211

வவுனியாவில்

நிலக்கண்ணி: பஸ் பயணிகள் 29 பேர் பலியாகினர்

நெடுங்கேணிக் கொலைகளுக்கு பதிலடி என்று அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 23

நேற்றுக் காலை வவுனியா பகுதியில் இடம் பெற்ற நிலக்கண்ணி வெடித்தாக்குதலில் இ. போ. ச. பஸ்ஸில் வந்த 29 சிங்களப் பயணிகள் கொல்லப்பட்டனர்.

24 பேர் காயமடைந்தனர். அவர்களில் 11 பேர் ஆபத்தான நிலையில் இருப்பதாகத் தெரியவருகிறது.

பிரப்மடு என்ற இடத்தில் இருந்து வந்த பஸ் ஒன்றே நிலக்கண்ணி வெடித் தாக்குதலில் சிக்கிச் சுக்கு நூறாயது.

அந்த இடத்திலேயே 17 ஆண் பயணிகளும் 8 பெண் பயணிகளும் உயிரிழந்தனர். படுகாயமடைந்த 14 பேர் உடனடியாக அனுராதபுரம் ஆஸ்பத்திரிக்கு ஹெலிக்கொப்டரில் கொண்டு செல்லப்பட்டனர்.

அனுராதபுரம் ஆஸ்பத்திரியில் வைத்து ஓர் ஆண், ஒரு பெண் இருகுழந்தைகள் உயிரிழந்தனர்.

மேலும் பலர் சிறிய காயங்களுக்கு ஆளாகினர்.

சம்பவம் பற்றி கூறப்படுவதாவது:-

காலை 9 மணியளவில் பிரப்மடு என்ற இடத்தில் இருந்து இந்த பஸ் புறப்பட்டது.

மாமடுவ என்ற இடத்துக்கும் காட்டு மாங்குளத்துக்கும் இடையில் (4 ஆம் பக்கம் பார்க்க)

நேரடிச் சமர்

பருத்தித்துறையில்

ஷெல் தாக்குதலில் இருவர் காயம்

பருத்தித்துறை, ஜூலை 23

நேற்றுக் காலை 11.00 மணியளவில் கவசவாகனங்கள் சகிதம் நூற்றுக்கணக்கான சிப்பாய்கள் பருத்தித்துறை இராணுவ முகாமை விட்டு வந்தாயர் முதலியார் வீதிவழியாக வெளியே வந்தனர்

முகாம் அருகில் காவல் விநந்த போராளிகளுக்கும் சிப்பாய்களுக்கும் இடையே சுமார் ஒரு மணி நேரம் நேரடிச் சமர் இடம் பெற்றது.

சிப்பாய்களில் பலர் காயமுற்றிருக்கலாம் என்று நம்பப்படுகிறது.

சம்பவம் நடந்தபோது ஹெலிக்கொப்டர் ஒன்று பல முறை தாழப் பறந்தது. இதன் மீது போராளிகள் தாக்குதல் நடத்த முற்பட்டபோது ஹெலிக்கொப்டர் உயரப் பறந்து சென்று விட்டது

சிப்பாய்கள் கவசவாகன (4 ஆம் பக்கம் பார்க்க)

வீதித் தடைகள் அகற்றப்படும் என அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 23

யாழ்ப்பாண நகர எல்லைக்குள் அங்கீகாரம் இன்றி போடப்பட்டுள்ள வீதித் திட்டிகள் அகற்றப்படும் என்று மாநகர ஆணையாளர் திரு. சிவிசே நிகழ்வு ஒன்றில் அறிவித்திருக்கின்றார்.

வீதிகளுக்குக் குறுக்கே வெட்டுதலும் திட்டிகள் அமைத்தலும் என்ற தலைப்பில் ஆணையாளர் விடுத்த பத்திரிகைக் குறிப்பில் தெரிவித்துள்ளதாவது;

யாழ்மாநகர பிரதேசத்திலுள்ள வீதிகளில் சண் - சன் - இங்கு ஆரம்பித்து கூடுதலான உயரத்திலுள்ள திட்டிகளை அமைத்தோ அல்லது வெட்டிப் பள்ளமாக்கியோ வீதிகளைச் சேதப்படுத்தி போக்குவரத்துக்கு இடைஞ்சல் உண்டுபண்ணுவது பற்றி எமது கவனத்துக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கை வேகமாகப் போகும் வாகனங்களின் வேகத்தைக் கட்டுப்படுத்துவதற்காகவே என்று கூறப்படுகிறது.

இப்பொழுது அமைக்கப்பட்டிருக்கும் தடைகளைப் பார்க்கும்போது வாகனங்கள் வேகமாக அல்லாது மெதுவாகக் கூடச் சென்றாலும் உதிரிப்பாகங்கள் வலுவுக்கேற்ப தகர்க்க முடியாத நிலை உருவாகும் என்று கூறப்படுகிறது. சைக்கிள் கட் (4 ஆம் பக்கம் பார்க்க)

முச்சந்திமுரசு

ஜனாதிபதியின்கருத்துப் பல வேளை விஜயின்கை காயமாகி வரும்... எதுவுமே சொல்ல ஏலாது இந்தக் காலத்திலே . . .

முகாம் அகற்றப்பட்டது

திருகோணமலை ஜூலை 23

திருகோணமலை அலஸ்தோட்டம் பகுதியில் தமிழ்ப் பல்லைக் கழக இயக்கத்துக்குச் சொந்தமான கட்டடம் ஒன்றில் இருந்த ஆயுதப் படை முகாம் அகற்றப்பட்டுள்ளது (உ - எ - 150)

சுபநேரம்

23—07—1986
புதன்கிழமை

சுபநேரம்:
04-32 முதல் 06-02 வரை
ராகுகாலம்:
12-02 முதல் 01-32 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொதுவும்

"ராக்கிங்"கை கைவிட புலிகள் கோரிக்கை

யாழ்ப்பாணம். ஜூலை23

இன்றைய போராட்ட குழலில் 'ராக்கிங்' போன்ற சேஷ்டைகளை கைவிட்டு போராட்ட உணர்வுடன் இணைந்து கொள்ளுமாறு பல்கலைக் கழக மாணவர்களிடம் தமிழீழவிடுதலைப் புலிகள் கோரிக்கை விடுத்திருக்கின்றனர்

இது தொடர்பாக புலிகள் விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது :-

பல்கலைக் கழகங்களில் நடைபெறும் 'ராக்கிங்' என்பது மேற்கு ஐரோப்பாவிலேயே தோற்றம் பெற்றது. பிரபுத்துவ சமுதாயத்தின் கேளிக்கைகளுக்காகவும் பொழுது போக்கிற்காகவும் அவர்களால் உருவாக்கப்பட்ட இது பிராமப்புற மாணவர்களும் நகர்ப்புற மாணவர்களும் அச்சமின்றி ஒன்று கலப்பதற்காக மேற்கொள்ளப்படும் அன்புத் தொல்லை என்றும் நியாயப்படுத்துவதோடு பல்கலைக் கழகங்களில் தொடர்கிறது.

பேரினவாதேயஏகாதிபத்தியத்தின் வழிவந்ததாக அமைந்த இலங்கைப்பல்கலைக் கழகங்களிலும் பல்கலைச்சமூகம் ஆரம்பிக்கப்பட் காலத்திலிருந்தே இது இடம் பெற்று வந்துள்ளது

'ராக்கிங்' தனது ஆரம்ப நிலையில் இருந்து மாற்றப்பட்டு இன்று (4 ஆம் பக்கம் பார்க்க)

உதைபந்தாட்டம் கைகலப்பில் முடிவு

குழப்பியவர்கள் இளைஞர்களிடம்

யாழ்ப்பாணம், ஜூலை23

கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நேற்று நடைபெற்ற வடமாநில கல்வித் திணைக்கள பாடசாலை உதைபந்தாட்டச் கற்றுப் போட்டியின் ஆட்டம் ஒன்று கைகலப்பில் முடிவுற்றது.

கைகலப்பின்போது தடிகள், பொல்லுகள், கத்திகள் பாவிக்கப்பட்டன.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரிக்கும் இடையில் நடைபெற்ற முதலாம் பிரிவு உதைபந்தாட்டப் போட்டியே நேற்று கைகலப்பில் குழம்பியது.

ஆட்ட நேர இடைவேளையின்போது இருஅணிகளில் எதுவுமே கோல் எதனையும் போட்டிருக்கவில்லை.

இடைவேளையின் பின்னர் ஆட்டம் விறுவிறுப்பாக நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில் ஓர் அணி சார்பான ரசிகர்கள் மைதானத்தில் இறங்கினர்.

அவர்கள் கைகளில் (4 ஆம் பக்கம் பார்க்க)

திருமலை நோக்கி வந்த 7 தமிழரின் நிலை என்ன?

திருகோணமலை, ஜூலை23

கடந்த மாதம் 26 ஆம் திகதி முல்லைத்தீவில் இருந்து படகுமூலம் திருகோணமலைநோக்கி வந்த 7 தமிழரின் நிலை என்ன என்பது பற்றித் தெரியவில்லை.

இது சம்பந்தமாக அவர்களின் உறவினர்கள் திருமலை பிரசைகள்குழுவுக்கு முறையிட்டுள்ளனர்.

படகு மூலம் புறப்பட்ட ஏழு தமிழரும் திருகோணமலைத் தொகுதியில் சல்லிக் கிராமத்தில் வசித்தவந்தவர்கள்.

அகதிகளாக முல்லைத்தீவுக்கு வந்த அவர்கள் மீண்டும் சல்லிக்குத் திரும்புகையிலே காணமற் போய்விட்டனர் என்று அறிய வருகிறது.

அவர்களின் பெயர்கள் வருமாறு:

1. சின்னராசா கமிர்தமலர்
2. சின்னராசா ரஞ்தெமலர்
3. ஜயநாதன் சிவநாதன்
4. ஆறுமுகம் பத்மநாதன்
5. முத்துக்குமாரு குலசேகரம்
6. கஜேந்திரன் யோகராசா
7. நாகராசா ஜெயராசா

(உ-எ 150)

யாழ் முஸ்லிம் பகுதியில் தாக்குதல்! தீவைப்பு!! கொள்ளை!!!

யாழ்ப்பாணம், ஜூலை23

யாழ்ப்பாணம் முஸ்லிம் பகுதியில் நேற்று முஸ்லிம் இளைஞர் கோஷ்டி ஒன்று திடீர் தாக்குதல் நடத்தியது பல லட்ச ரூபா பணமும் பல லட்சரூபா பெறுமதியான நகைகளும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

ஏழுவீடுகள், இரண்டு கடைகள் சேதமாக்கப்பட்டுள்ளன தீ வைப்பும் இடம் பெற்றது.

நேற்றைச் சம்பவம் பற்றி அறிய வருவதாவது.

நேற்று பகல் இரண்டு மணியளவில் முஸ்லிம் இளைஞர்கள் கொர், வாள் பொல்லு, அலவாங்குகள் சகிதம் பல முஸ்லிம் வீடுகளையும், கடைகளையும் அடித்து நொறுக்கினார்கள்

கடந்த மாதம் 24 ஆம் திகதி முஸ்லிம் பகுதியில் நடைபெற்ற கோஷ்டி மோதலின் எதிரொலியாக—பழிவாங்கும் நடவடிக்கையாகவே — இத்தாக்குதல்கள் நடத்தப்பட்டதாகச் சொல்லப்படுகிறது.

சுமார் 35 பேர் அடங்கிய முஸ்லிம் இளைஞர்கள் குழுவொன்று இத் (4 ஆம் பக்கம் பார்க்க)

பொலன்னறுவைப் பகுதியில் சிங்களவர்கள் பலர் பீதிமால்வெளியேற்றம்

கொழும்பு, ஜூலை 23

பொலன்னறுவை மாவட்டத்தில் 23 சிங்களக் குடியானவர் இனந்தெரியாதவர்களின் தாக்குதலுக்கு உயிரிழந்ததைத் தொடர்ந்து, பல சிங்கள கிராமங்களில் இருந்து சிங்கள மக்கள் வெளியேறுகின்றனர்.

மிஹோல்டேவோ கிராமத்தில் இருந்து வெளியேறும்படி இனந்தெரிய நபர்கள் அங்கு வசிப்பவர்களைப் பயமுறுத்தினராம்.

அதைத் தொடர்ந்து அக்கிராம மக்கள் பெரும்பாலோர் மூடை முடிச்சுக்களுடன் பாதுகாப்புத் தேடி வேறு இடங்களுக்குச் சென்றனர்.

இதனிடையில் மெதிரிகிரிய ஹோட்டல் ஒன்றில் தமது தங்கள் வெட்டப்பட்ட நிலையில் 5 சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டன இச்சடலங்கள் மெதிரிகிரிய ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டன.

(இ-எ)

தமிழ்மொழி மாநில கோரிக்கையால்

பேச்சும் தீர்வும் குழம்பும் சாத்தியம்

விஜே அபாய அறிவிப்பு

— கொழும்பிலிருந்து சிறப்புச் செய்தியாளர் —

கொழும்பு, ஜூலை 23

தமிழர் விடுதலைக் கூட்டணியினரின் தமிழ்மொழி மாநிலக் கோரிக்கையால் இனப் பிரச்சினைக்கான தீர்வும், பேச்சும் குழம்பும் சாத்தியம் உண்டு.

இவ்வாறு சிறிலங்கா மக்கள் கட்சிச் செயலாளர் திரு. விஜய குமாரணதுங்கா "அபாய அறிவிப்பு" விடுத்தார்.

தமிழ்மொழி மாநில அமைப்புடன் அதிகாரப் பகிர்வு இடம்பெறவேண்டும் என்ற கூட்டணியின் கோரிக்கை இலங்கை பிரச்சினைத் தீர்வு நடவடிக்கையை முற்றாக முறிப்பதாகி விடும் என்றும் அவர் சொன்னார்.

தமிழ் பேசும் பிரதேசங்கள் அடங்கிய பகுதிகளை எல்லாம் ஒன்று சேர்த்து தமிழ் மொழி மாநில அமைப்பு ஒன்றை உருவாக்கி அதிகாரப் பகிர்வு வழங்கப்படவேண்டும் என்ற கோரிக்கையைச் சிங்கள மக்கள் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்.

இக் கோரிக்கையினால் (4 ஆம் பக்கம் பார்க்க)

வடக்கில்

பாரிய தாக்குதலுக்கு அரச படைகள் முஸ்தீபு

புலிகள் எச்சரிக்கை

சென்னை, ஜூலை 22

வடபகுதியில் பாரிய தாக்குதல் ஒன்றை நடத்த இலங்கை அரச படைகள் தயாராகி வருகின்றன.

இப்படி தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் சென்னையில் அறிவித்திருக்கின்றது.

ஏராளமான வாகனங்கள், புதிய ரகங்கள் விசா விமானங்கள் வடபகுதி முகாம்களுக்கு கொண்டு வரப்பட்டு உள்ளன

ஏராளமான சிப்பாய்களும் வடபகுதிக்கு அனுப்பப்பட்டுள்ளன.

மீண்டும் ஒரு பாரிய தாக்குதலுக்கான ஏற்பாடுகளை வடபகுதியில் அரச படைகள் மேற்கொண்டுள்ளன

இப்படி புலிகள் இயக்கம் விடுத்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது

(உ-எ)

அரசு- கூட்டணி பேச்சில் தீர்க்கமான முடிவு எதுவுமில்லை

—சிவா தகவல்

கொழும்பு, ஜூலை 23

அரசாங்கத்துடன் கடந்த பல நாட்களாக நாம் பேச்சுவார்த்தை நடத்திய போதிலும் எந்த விஷயத்திலும் தீர்க்கமான முடிவு எதையும் இன்னும் எட்டவில்லை.

சில விஷயங்களில் மட்டும் சற்று முன்னேற்றம் காணப்பட்டுள்ளது. அவ்வளவு தான்.

இவ்வாறு கூட்டணித் தலைவர் திரு.மு.சிவசிதம்பரம் தெரிவித்தார்.

கூட்டணித் தூதுக்குழு நேற்று மாலை சுமார் இரண்டரை மணி நேரம் ஜனாதிபதியுடன் பேசியது.

தமிழ் மொழி மாநிலம் குறித்து அரசிடம் எடுத்துச் சொன்னோம் அரசிடம் இருந்து பதில் கிடைக்கவில்லை அது குறித்து விவாதப் பேச வேண்டியது அவசியம்

சட்டம் ஒழுங்கு சம்பந்தப்பட்ட வரையில் எங்கள் கோரிக்கைகளுக்கு அரசிடம் இருந்து சாதகமான பதில் கிடைத்தது. அவ்விடயத்தில் நியாயமான ஒரு திட்டம் தயாராகக் கூடிய சூழ்நிலை உண்டு.

காணி, குடியேற்றம் சம்பந்தமாக பெரிதாகச் சொல்வதற்கு எவ்வித முன்னேற்றமும் இல்லை

நாம் பேச்சுவார்த்தை நடத்திய போதிலும் எவ்வித திட்டத்தையும் எழுத்தில் வடிக்க முடியவில்லை

எனவே பேச்சின்போது பரிசீலிக்கப்பட்ட விஷயங்கள் குறித்து திட்டங்களாகி மீண்டும் பேச வேண்டிய அவசியம் இருப்பதாகக் கருதுகிறோம்.

சென்னை சென்று 2,3 நாளாகவே பேச்சுக்களின் பெறுபேறுகளை விரிவாக ஆராய்ந்து திட்டமாக உத்தேசித்திருக்கிறோம்

—இப்படி திரு. சிவசிதம்பரம் சொன்னார்

கூட்டணி தலைவர் அமைச்சர் காமினி திஸாநாயக்காவைச் சந்தித்துப் பேச உள்ளது.

கூட்டணித் தலைவர்கள் நேற்று மாலை ஜனநாயக கத்தோலிக்க முன்னணி தலைவர்களுடன் ஏ அஸீஸை சந்தித்துப் பேசினர்.

அவர்கள் விடாமுத்திமை பயணமாகி.

(அ-எ)

ஊர்வலத்தின் புனிதம் கெட்டுவிட்டது

இணக்க சபை அறிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை23

சாதிவிகிதமான முறையில் நீதிகோரி நேற்று ஆர்ப்பாட்டப் ஹர்த்தால் ஊர்வலம் ஆகியவற்றின் புனிதத்தன்மை ஊர்வலத்தின் முடிவிலே நடைபெற்ற அம்பாரி விநாயகர் மாகபடுத்தப்பட்டுவிட்டது

யாழ் முஸ்லிம் இணக்க சபையின் தலைவர் இஸ்மாஸ் லி மூஸின் கௌரவ காரியதரிசி ஜனாப் க.ஏ.மு சாகுல் ஹமீட் ஆகியோர் இவ்விடயம் விடுத்த அறிக்கையில் இப்படித் தெரிவிக்கப்பட்டிருக்கிறது

நிலைமையும் விரைவில் (4 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுமார் ஆயிரம்

கிளிநொச்சி அகதிகள் உதவி இன்றி அவதி

யாழ்ப்பாணம், ஜூலை 23

கிளிநொச்சி அரசாங்க அதிபர் விதிகளினால் அங்கிருந்து அகதிகளாக வெளியேறி யாழ்மாவட்டம் வந்துள்ள எவர்களுக்கு நிவாரண பகிர்வு இன்னும் அரசால் வழங்கப்படவில்லை

கிளிநொச்சியில் இருந்து சுமார் 1000 பேருக்குமேல் அகதிகளாக வந்துள்ளனர்.

இவர்கள் பற்றிய தகவல்களை, யாழ் சமூக சேவைத் திணைக்களம் அரச அதிபர் ஊடாக புனர் நிவாரண அமைச்சுக்கு அனுப்பியுள்ளது

திருகோணமலையிலிருந்து வந்துள்ள அகதிகள் ஓரளவு நிவாரண பகிர்வு பெற்றவருகிறார்கள். (இ-5)

இந்தியா தீவிரமாக நடவடிக்கை எடுக்க வேண்டும்

வரியிறுப்பாளர் சங்கம் தீர்மானம்

யாழ்ப்பாணம், ஜூலை 23

சமத்தமிழினத்தை பேரழிவில் இருந்து காப்பாற்ற காலகாலத்தில் தீவிரமான நடவடிக்கை எடுக்க இந்தியா முன்வரவேண்டும்.

இப்படி யாழ் மாநகர வரியிறுப்பாளர் சங்கம் தீர்மானம் நிறைவேற்றி உள்ளது.

நிரு க. செ மகாதேவா தலைமையில் சங்கச் செயற்குழுக் கூட்டம் நடந்தது

நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் கூறப்பட்டிருப்பதாவது:

தமிழர் விடுதலைப் போராட்டத்தை மார்க்சிச பயங்கரவாதம் என்று இலங்கை அரசு கூறிக்கொண்டு அப்பாவித் தமிழர்களைக் கொன்று குவிப்பதில் ஆயுதப் படையினரையும் குண்டர்களையும் ஏவி விட்டுள்ளது.

தமிழ்ப் பகுதிகளில் அமைதி குலைவிற்கும் வன்செயலுக்கும் காரணமான இராணுவம் வாபஸ் வாங்கப்பட வேண்டும்.

அடக்குமுறைகளைப் பார்க்கும்போது தமிழின ஒழிப்பை இலக்காகக் கொண்டு அரசு செயல்படுவது மறுக்க முடியாத உண்மை

இப்படி தீர்மானம் கூறுகின்றது (இ-எ)

பாடசாலைகளில் பாதுகாப்புக் குழு

தாளையடி, ஜூலை 23

நாட்டிலுள்ள அரசாங்க பாடசாலைகளில் பாதுகாப்புக் குழுக்களை அமைக்கும்படி அதிபர்களை கல்வி அமைச்சு கற்றுறிநருபம் ஒன்றின் மூலம் கோரியுள்ளது.

நடைபெற்று வரும் குண்டு வெடிப்புச் சம்பவங்களிலிருந்து பாடசாலை மாணவர்களையும், ஏனையோரையும் பாதுகாக்கும் பொருட்டே இப்பாதுகாப்புக் குழுக்களை அமைக்கும்படி கோரப்பட்டுள்ளது

இக்குழு அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்பெற்றோர்கள், ஏனைய பாடசாலை வழிகாட்டிகளை உள்ளடக்கியதாக இருத்தல் வேண்டுமெனவும் கோரப்பட்டுள்ளது. (இ-144)

யாழ் வேம்படி சின்னம் வழங்கும் வைபவம்

யாழ்ப்பாணம், ஜூலை 23

யாழ் வேம்படி மகளிர் கல்லூரியில் முதலுதவிப் பயிற்சியை ஒழுங்காகப் பெற்ற இறுதிப் பரீட்சையில் சித்தி அடைந்தவர்களுக்கும் தலைமைத்துவம், சமூகசேவை, ஆலோசனை வழங்கல் ஆகியவற்றில் பயிற்சிபெற்ற நியமனம் பெறுபவர்களுக்கும் சின்னங்கள் வழங்கும் வைபவம் அண்மையில் நடைபெற்றது. (இ-எ)

ஆனையிறவு தாண்டும் வாகனங்கள்

நாவற்குழியால் வருமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 23

ஆனையிறவைத் தாண்டி தெற்கே செல்லும் சகல வாகனங்களும் நாவற்குழியால் வரும்படி கேட்கப்பட்டுள்ளன.

நேற்றைய தினம் வாகனங்களுக்கு பாஸ் பெறுவதற்காக கோட்டைபலாலிமுகாம்களுக்குச் சென்ற வாகன உரிமையாளர்களுக்கு இதுபற்றிக் கூறப்பட்டுள்ளது

பாஸ் பெறுவதில் இருந்த சில தெடுபிடிகள் தளர்த்தப்பட்டதைத் தொடர்ந்தே இவர்கள் முகாமுக்கு சென்றிருந்தனர்

வடமராட்சி, மேற்கு சேர்ந்த வாகன உரிமையாளர்கள் தங்களுக்கு புத்தூர் பாதை இரகுவானது என்று கூறியதைத் தொடர்ந்து அவர்களில் சிலருக்கு பாஸ் வழங்கப்பட்டது (இ-5

லொறி கடத்தல் குறித்து முடிவு எடுக்க ஆட்சிக் குழுவுக்கு அதிகாரம்

யாழ்ப்பாணம், ஜூலை 23

லொறியில் வரும் பொருட்களைக் கடத்தும் சம்பவங்கள் குறித்து தீர்க்கமான முடிவு எடுக்க ஆட்சிக்குழுவுக்கு யாழ் வர்த்தகர் சங்க பொதுச் சபை அதிகாரமளித்துள்ளது.

கடந்த சனிக்கிழமை நடைபெற்ற யாழ்வர்த்தகர் சங்க பொதுச்சபை கூட்டத்தில் இது சம்பந்தமான தீர்மானம் எடுக்கப்பட்டது.

பாரதி பாஷா வித்தியாலயத்தில் நடந்த இக்கூட்டத்துக்கு திரு க. நடராசா தலைமை வகித்தார்.

கூட்ட ஆரம்பத்தில் அகால மரணமடைந்தவர்களுக்கு 2 நிமிட அஞ்சலி செலுத்தப்பட்டது

லொறிகள் கடத்தப்படுவது, பொருள்கள் குறையாடப்படுவது குறித்து ஆராய்க்கவே இந்தக்கூட்டம் ஒழுங்கு செய்யப்பட்டது

நலன் விரும்பிகள், போக்குவரத்துச் சங்கம் முன்னிலை போக்குவரத்து ஒன்றியம் முதலியவற்றின் பிரதிநிதிகளுடன் பேசி தீர்க்கமான முடிவு எடுக்கும்படி ஆட்சிக்குழுவுக்கு அதிகாரம் அளிப்பது என்று பொதுச்சபை இறுதியில் முடிவு செய்தது (இ-எ)

நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்

அமரர்
திரு. நா. சின்னத்தம்பி

மலர்வு: 09-04-1924 உதிர்வு: 24-06-1986

எங்கள்குடும்பத்தலைவரின்இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டவர்களுக்கும் இறுதிச் சடங்கு ஒழுங்குகளில் உதவியவர்களுக்கும் எங்கள் இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்வதுடன் நாளை 24-07-86 வியாழக்கிழமை வீட்டில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உறவினர், உறவினர், அன்பர்கள், நண்பர்கள் அனைவரை கேட்டுக்கொள்ளுகின்றோம்.

மனைவி, பிள்ளைகள்,
மருமகன், மருமகள்,
பேரப்பிள்ளைகள்.

'இந்திராபுரம்',
முகமாலை,
எழுதமட்டுவாள்.

மொழியும் சமூகமும் ஒன்றை ஒன்று சார்ந்தவை

பிரிக்க முடியாது என்கிறார் விரிவுரையாளர்

யாழ்ப்பாணம் ஜூலை 23

மொழியும் சமூகமும் ஒன்றை ஒன்று சார்ந்தவை. இரண்டையும் தனித்தனியே பிரிக்க முடியாது. பேச்சு, மொழி, சமூக மாற்றத்தோடு மாறுகிறது

மொழி - பண்பாட்டுத் துறை விரிவுரையாளர் கலாநிதி திருமதி பார்வதி சந்தசாமி இவ்வாறு கூறினார்

சி. வல்லிபுரகுலத்தின் 'ஈழத்துப் புனைகதைகளில் பேச்சுவழக்கு' என்னும் நூலின் வெளியீட்டு விழாவில் கலந்துகொண்டு ஆய்வுரை நிகழ்த்துகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் எழுத்து - மொழியின் ஆரம்பமே பேச்சு மொழி. இவ்விரண்டிடையே பிரிக்க முடியாது ஏனெனில் இவ்விரு மொழிகளும் காலத்துக்குக் காலம் மாறும் தன்மை உடையவை என்றார்.

பேராசிரியர் சு. சண்முகதாஸ் தலைமையில் நடந்த இந்நூல் வெளியீட்டுவிழாவில் சிறியாசிரியர் ராசா, இ. சரவணமுத்து ஆகியோர் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தனர்.

பேராசிரியர் சு. வித்தியானந்தன் வாழ்த்துரை வழங்கினார்

வித்துவான் க. சொக்கலிங்கம் நூல் வெளியீட்டுரை நிகழ்த்தினார்.

முற்போக்கு எழுத்தாளர் சங்கச் செயலாளர் எஸ். சோமகாந்தன் ஆய்வுரையும், கலாநிதி சி மௌனகுரு நன்றியுரையும் வழங்கினார்கள்

யாழ் முத்தமிழ் வெளியீட்டுச் சமூகம் இந்நூல் வெளியீட்டு விழாவை ஒழுங்கு செய்திருந்தது. (இ-5)

கல்வி கண்காட்சி

யாழ்ப்பாணம், ஜூலை 23

யாழ் ஆனைப்பந்தி மெ. மி த. க பாடசாலையில் கல்வி கண்காட்சியை அண்மையில் நல்லூர் வட்டாரக் கல்வி அதிபர் திரு. எஸ் வை நாயகமூர்த்தி திறந்து வைத்தார். (இ-எ)

இலவச முதலுதவிப் பெட்டி

பருத்தித்துறை, ஜூலை 23

பருத்தித்துறை, உடுப்பிட்டி கல்வி வட்டாரத்திலுள்ள 85 பாடசாலைகளுக்கு இலவச முதலுதவிப் பெட்டிகள் விரைவில் வழங்கப்படவுள்ளன.

இதற்கான சகல நடவடிக்கைகளையும் வடமராட்சிப் பகுதியிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களும், பருத்தித்துறை மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரி திரு. கே. வனிதகுமாரும் கூட்டாக மேற்கொண்டு வருகின்றனர்.

இப்பகுதியிலுள்ள சகல பாடசாலை மாணவர்களுக்கும் முதலுதவி, விபத்து முதலுதவி, பாம்புக்கடி, தற்காப்பு [illegible] பயிற்சிகளை வழங்குவதற்கு [illegible] தகுந்த ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (உ-118)

கிளிநொச்சியில் மீனுக்கு கட்டுப்பாட்டு விலை

கிளிநொச்சி, ஜூலை 23

கிளிநொச்சியில் மீனுக்கான கட்டுப்பாட்டு விலைகளை சில பொதுத்தாபனங்கள் நிர்ணயித்துள்ளன. இதனைமீறி வோர்மீது கடும் நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனக் கூறும் சுவரொட்டிகளும் கிராமப்புறங்களில் ஒட்டப்பட்டிருக்கின்றன

கிளிநொச்சியில் அண்மையில் நிகழ்ந்த அசம்பாவிதங்களினால் மத்திய சந்தை மூடப்பட்டுள்ளது இதனால் மீன் வியாபாரிகள் கிராமப்புறங்களிலும், கிராமச்சந்தைகளிலும் மீன் வகைகளின் விலைகளை தம் இஷ்டப்படி விற்க ஆரம்பித்துள்ளனர்

இதனால் பொதுமக்கள் பெரிதும் பாதிப்படைந்திருக்கின்றனர். பொதுமக்களும் மீன் வியாபாரிகளும் பாதிக்காதவாறு மீன் வகைகளுக்கு தற்போது நிர்ணய விலை குறிக்கப்பட்டுள்ளது. (உ-76)

யாழ்ப்பாணத்தில்

மதுப்பழக்கத்தை விட்டொழிக்க விரும்புவோருக்கு சங்கம் தேவை

வைத்திய கலாநிதி கூறுகிறார்

உடுப்பிட்டி, ஜூலை 23

மது அருந்துவதிலிருந்து முற்றாக விடுபடு நலன் விரும்பிகளாக வாழ முற்படுபவர்களுக்கென யாழ்ப்பாணத்தில் ஒரு சங்கம் அமைக்கவேண்டும். இவ்வாறான சங்கங்கள் இன்று பல இடங்களிலும் காணப்படுகின்றன.

வைத்திய கலாநிதி க. குகுமார் மேற்கண்டவாறு கூறினார்.

புலோலி — அம்பாய் மகளிர் ஒன்றியம் குரும்பசிட்டி, புலோலி தெற்கில் அண்மையில் நடத்திய கருத்தரங்கில் கலந்து கொண்டு 'மது அருந்துவதினாலும் புகைத்தலினாலும் விளையும் தீங்குகள்'' என்னும் விடயம் பற்றி அவர் உரையாற்றினார்

அவர் மேலும் பேசியதாவது;—

குடிப்பதை இன்று நாகரிகமாக நினைத்துப் பலர் குடிக்கிறார்கள் குடிப்பவர்களை நண்பர்களாகிக் கொள்வதன் மூலமும் மற்றவர்களும் இந்த குடியை எளிதாகப் பழகிக் கொள்கின்றார்கள். மது அருந்துபவர்கள் அதிலிருந்து விடுபட்டு திருந்தி வாழ முற்படும் போது அவர்களுக்கென ஒரு சங்கம் யாழ்ப்பாணத்தில் ஏற்படுத்தப்படவேண்டும்

இன்று எமது நாட்டில் மாணவர்களிடையே போதைப்பொருள் பாவனையும் அதிகமாகக் காணப்படுகின்றது.

புகைத்தலில் நிக்கொட்டினை எனும் பொருள் காணப்படுகின்றது புகை பிடிக்கும் போது இப்பொருள் அதிக உற்சாகத்தைக் கொடுக்கின்றது. தொடர்ந்து புகைப்பதன் மூலம் இப்பொருளானது உடலைப் பல வினமடையச் செய்கின்றது.

வயிற்றில் அழற்சி, நுரையீரல் பாதித்தல், இரத்தக்குழாய்கள் தடித்தல், காயங்கள் ஆறுதல் போன்ற நோய்கள் புகைத்தலினால் ஏற்படுகின்றன

இப்படி அவர் கூறினார்.

கருத்தரங்கிற்கு புலோலி—அம்பாய் மகளிர் ஒன்றியத் தலைவர் திரு ஆ. சி. தம்பிமுத்து தலைமை வகித்தார் (இ-157)

'யூனிசெப்' கீழ் நடந்த திட்டத்தின் போட்டிகள்

யாழ்ப்பாணம், ஜூலை 23

யாழ் மாநகராட்சி மன்ற சுகாதாரப் பகுதியினரால் யூனிசெப் திட்டத்தின் கீழ் நடத்தப்பட்ட சுவரொட்டி, பேச்சு, கட்டுரைப்போட்டிகளில் முதலிடம் பெற்றவர்கள் விபரம் வருமாறு

சுவரொட்டிப் போட்டி

கனிஷ்ட பிரிவு போறயத்தன் ஸ்ரீக்கிறிஸ் வரா வித்தி சிரேஷ்ட பிரிவு சியாஜினி சிவநேசன் (யாழ் கன்னியர் மடம் ம. வி.)

பேச்சுப் போட்டி

கனிஷ்ட பிரிவு சோ வோவன்ட் (கன்னியர் மடம் ம. வி.) மத்திய பிரிவு கே. லலிதாம்சனா (கன்னியர் ம ம. வி.) மேற்பிரிவு மதிநாயகம் (பற்றிக்ஸ் கல்லூரி)

கட்டுரைப் போட்டி

யூனிசெப் பாடசாலைகளுக்கும் சகல பாடசாலைகளுக்குமென இரு பிரிவாக நடத்தப்பட்டது

யூனிசெப் பாடசாலைப் போட்டியில் கனிஷ்ட பிரிவு செ தயாளினி (யாழ் கன்னியர் மடம் ம வி.) மத்திய பிரிவு ஆன் ஜெனிற்ரா (சென் ஜேம்ஸ் மகளிர் பாடசாலை) மேற் பிரிவு அ. ஹரிஸ்ரெலா யாழ் கன்னியர் மடம் ம. வி.)

சகலபாடசாலைகளுக்குமான போட்டியில் கீழ் பிரிவு த சரோஜினி (ஸ்ரீ கிறிஸ்னேஸ்வர வித்தி) மேற்பிரிவு தி ஜெயநிதி (யாழ் கன்னியர் மடம்) (இ-ஒ)

பொருள்கள் அன்பளிப்பு

மட்டக்களப்பு ஜூலை 23

பூலா முனாமில் உள்ள நபர்களுக்கு மட்டக்களப்பு ரோட்டறிக் சமூகம் சுமார் 10 000 ரூபா பெறுமதியான பொருள்களை அன்பளிப்புச் செய்துள்ளது

சாரம், துவாய், சோப், பற்பசை உட்பட அத்தியாவசிய பொருள்கள் இதில் அடங்குகின்றன. (இ-21)

மாநிலம்-மாவட்டம்-உள்ளூர்

கரடிப்போக்குச் சந்திப் பாலம் திருத்தப்படும்

உருத்திரபுரம், ஜூலை 23

கிளிநொச்சி கரடிப்போக்குச் சந்திக்கண்மையிலுள்ள பாலம் திருத்தி அமைக்கப்படவுள்ளது.

கிளிநொச்சியில் நடந்த போராளிகள்— இராணுவச் சண்டையின்போது தகர்க்கப்பட்ட பாலங்களில் கடுதலானவை யாழ்-கொழும்பு பிரதான வீதியில் அமைந்துள்ளன

குறுக்கு வீதிகளிலுள்ள சில பாலங்களும் தகர்க்கப்பட்டுள்ளன.

இதனால் யாழ்ப்பாணத்திலிருந்து தென் பகுதிக்குச் செல்லும் வாகனங்களோ, அன்றி தென் பகுதியிலிருந்து யாழ்ப்பாணம் வரும் வாகனங்களோ கிளிநொச்சி பிரதான வீதியை அமைந்து உள்ள இராணுவ முகாமுக்கு முன்னாலுள்ள வீதியால் செல்லமுடியாது வேறு பாதைகளினால் செல்ல வேண்டி உள்ளது

அவ்வாறு செல்லும் வாகனங்கள் மீண்டும் இராணுவ முகாமுக்கு முன்னால் செல்ல வைக்கும் நோக்கத்தோடே இப்பாலம் திருத்தி அமைக்கப்பட இருக்கிறது என்று தெரிகிறது

கிளிநொச்சி இராணுவ முகாமைச் சேர்ந்த இளைப்பாறியோரி வெருந்தெருக்கள் நிர்மாணத்துடன் தொடர்பு கொண்டு கிளிநொச்சி பிரதான பாலத்தைத் திருத்தி அமைக்க முயற்சி எடுத்துள்ளார்.

கிளிநொச்சி கந்தசுவாமி கோவிலடிப் பாலம் மீண்டும் புனர் அமைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது (இ-155)

ஆங்கில மூலச் சுருக்கெழுத்து வகுப்புகள்

யாழ்ப்பாணம், ஜூலை 24

ஜீ. சி. ஈ. சாதாரண பத்திரப் பரீட்சைக்கு விண்ணப்பித்த மாணவரின் நலன் கருதி ஆங்கில மூலமான சுருக்கெழுத்து வகுப்புகளை நடத்த மல்லாகம் இளைஞர் கழகம் முன்வந்து உள்ளது.

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு மல்லாகம் மகா வித்தியாலயத்தில் இவ் வகுப்பு ஆரம்பிக்கப்படுகின்றது. (இ-எ)

வருடாந்தப் பொதுக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 24

யாழ்ப்பாணம், ஆனைப்பந்தி மெ மி த. க. பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் அண்மையில் நடைபெற்றது.

பாடசாலை முன்னேற்றத்திற்குப் பெற்றோர் ஆற்றிய பங்களிப்பு உறுதுணையாக இருந்தது — என்று அதிபர் திரு ச. கைலாபதியினை தனது தலைமையுரையில் சொன்னார்.

இறுதியில் நிர்வாகக் குழு தெரிவானது (எ

நாவற்குழி - நோர்வே (ஒஸ்லோ)

ஒஸ்லோ செல்ல விரும்புபவர்கள் விசேட சலுகைக் கட்டண விமானச் சீட்டுகளுக்கு எம்முடன் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.

இதற்கான விசேட ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

Mack Communications & Travels
No: 8, 1st Lane, Point Pedro Road, Jaffna. Tele:- 24791, 24836

பிரயாண ஒழுங்குகள்

* கனடா
* ஜேர்மன்
* பிரான்ஸ்
* டென்மார்க்

ஆகிய நாடுகளுக்கு பிரயாண ஒழுங்குகளை மேற்கொள்ளவும்

மற்றும்

பாஸ்போட், விசா, பொன்ட், (BOND) ரிக்கட் ஆகியனவும் செய்துகொடுக்கப்படும்.

INTERSUN GROUP

சின்னத்தம்பி அவெனியூ, [illegible]
மானிப்பாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதய சங்கற்பம்

ஒவ்வொரு புவிதமான ஆசையும் கடவுள் பிரார்த்தனையே ஆகும்.

— ஹஸ்கர்

உதயன்

உண்மை - விடுதலை - நடுநிலைமை

இல, 15 2வது ஒழுங்கை தொலைபேசி 24805
கிட்டிணர் நிலை வீதி, 22073
யாழ்ப்பாணம் 23-07-86 த பெ 23

மூன்று வருடம் கழிந்த முக்கிய கட்டத்தில்....

இன்று ஜூலை இருபத்து மூன்றும் திகதி. சுதந்திரத்துக்குப் பிந்திய இலங்கையின் சரித்திரத்தில் அழித்துவிட முடியாத கொடிய நாள். மனிதர்கள் மிருகங்களாக மாறி— அரக்கர்களாக மாறி ஆயிரம் ஆயிரம் தமிழர்களை இரக்கம் என்பது சிறிதும் இன்றி வெட்டியும், குத்தியும், கொத்தியும், குதறியும், எரித்தும் இரத்த வெறி தீர்த்த நாள்.

1983 ஜூலை 23 ஆம் திகதி ஆரம்பித்து, கமலா ஒரு வார காலத்துக்கு, தெற்கு என்றும் மேற்கு என்றும் எல்லை வகுக்காமல் — வடமத்தி என்றும் வடமேற்கு என்றும் தவிர்த்து விடாமல் — சிங்கள இலங்கை எங்கும் தமிழரின் உயிர்கள் கொய்யப்பட்டன

பேரரவுதெற்கு என வந்து வடக்கில் மரித்த 13 சிங்கவர் சிப்பாய்களின் மரணத்துக்காக முவாயிரத்துக்கும் மேற்பட்ட தமிழர்கள் குதறிக் கொலை செய்யப்பட்டனர் இன வெறி, நாடி நரம்புகளை நிறைத்து இரத்தவெறியாக மாறவே, தமிழர்கள் சிங்களக் காடையர்களுக்குப் பலியான சோகம் நிறைந்த சரித்திரம் அது. நாம் பெரும்பான்மையினர்— வலியவர்கள் என்ற மமதையினால் — அகம்பாவத்தால் சிங்களவர் நடத்திய அட்டூழியம் அது

அவர்களின் காட்டுமிராண்டித்தனத்தை அகில உலகமும் பழித்தது. அநாகரிகம் நிறைந்த இனத்தவர் என்று தூற்றியது. அதன் பின்னர்தான் அவர்களுக்கு தமது பாவம் புரிந்தது.

அதனால் 1983 ஜூலைக்குக் "கறுப்பு ஜூலை" என்று பெயரிட்டார்கள். தங்களில் ஒரு சாரார் மட்டுமே செய்ததாக பாவ மன்னிப்புக்கோரும் பாவனையில் பேசினார்கள்; எழுதினார்கள். உலகத்தில் தமக்கு ஏற்பட்ட அவப்பெயரை— களங்கத்தை நீக்க என்ன என்னவோ எல்லாம் சொன்னார்கள்; செய்தார்கள்.

எத்தனை கோடி புண்ணியம் செய்தாலும் நீங்கக் கூடிய பாவமா அது?

அடுத்துத் தொடரக்கூடிய ஊழாக நினைத்து அவர்கள் 'கறுப்பு ஜூலை" காட்டுமிராண்டித் தனத்தை மறந்து விடக்கூடும். ஆனால் ஈழத் தமிழர்கள் அதனை இலகுவில் மறந்துவிட மாட்டார்கள். அவர்கள் எழுதிவரும் புதிய வரலாற்றில் 1983 ஜூலைக்கு மிக முக்கிய இடம் கொடுக்கப்படும்

தமிழர் சரித்திரத்தில் 1983 ஜூலை பெரும் திருப்புமுனை என்றும் கொள்ளலாம். தீமை விளைவதும் நன்மைக்கே என்று கொள்ளப் படுவது இல்லையா? தங்கள் சொந்த மண்ணை மறந்து தென்னிலங்கை தான் சொர்க்கம் என நினைத்திருந்தவர்களை "வழிக்குக் கொண்டு வந்து" காலமகவும் அதனைக்கருதலாம்.

உரிமை பெற்ற சுதந்திர மக்களாக வாழ வேண்டும் என்ற உணர்ச்சியை, உத்வேகத்தை பரந்த அளவில், பெரிய அளவில் தமிழர் எல்லோர் மனதிலும் உருவாக்கியது 83 ஜூலை தான்.

தமிழ் மக்கள் பலரின் உயிர்கள் இழந்து போயின. உடைமைகள் அழிந்து போயின. பலர் வாழ வழியற்றவர்களாக, அனாதைகளாக நிர்க்கதிக்கு ஆளானது உண்மைதான்; வேதனையும் தந்தது இழப்புகள் இழந்தவைதாம்.

ஆனால் இழப்புகளின் அத்திவாரத்தில் எழுச்சி பொங்கியது சுதந்திர உணர்வு பிரவகித்தது தமிழ் இளைஞர்கள் வீரமறவர்களாக்கியது. தமிழத் தாயகத்தின் — இந்த மண்ணின் மைந்தர்களின் உரிமைகளை வென்றெடுக்க அணி அணியாகத் திரண்டு எழச் செய்தது; மன உறுதியை உண்டாக்கியது.

1958 இல், 1977 இல், 1981 இல் என்று பல தடவைகள் இனக் கலவரங்கள் வெடித்தது உண்டு. அவ்வேளைகளிலும் தமிழர்கள் தாக்கப்பட்டனர்; சிலர் உயிரிழந்ததும் உண்டு ஆனால் 1983 ஜூலை. இனக்கலவரம் என்ற வரைபுவின் (Graph) உச்சி முனைக்குப் போய் தமிழர்களை மறுதிசைக்குத் திருப்பியது ஆகவே அது, தமிழர் வரலாற்றில், உரிமைப் போராட்டத்தில் லாப — நஷ்டக் கணக்கின் திசை மாறு கோணமாயியது. அதனால் தமிழர்கள் உள்ளவரை அவர்கள் மனதை உணர்வைத் தட்டிவிடும் நாளாகவே அது இருக்கும்

1983 ஜூலை 23 — 1986 ஜூலை 23

மூன்று வருடங்கள் கழிந்து விட்டன. இடையிலும் இப்போதும் தமிழர் பட்ட, படும் கஷ்டங்கள், நஷ்டங்கள் கணக்கில் வைக்கமுடியாதவை. அடிக்கடி இப்பத்தியில் எடுத்துரைக்கப்பட்டவை.

உரிமைப் போர் என்று தொடங்கினால் இவை எல்லாம் சர்வ சகஜம். முன்முண்டு காலத்தில் அதன் இடைவழியில் நாம் நிற்கிறோம் அரசியல் தீர்வு ஒன்று குறித்து இப்போது ஆராயப்படுகிறது. அது அரைகுறைத் தீர்வாக இல்லாமல் முழுத்தீர்வாக வருமானால் யாவருமே மகிழலாம். அப்படி ஆகுமா என்பதே மிகப்பெரிய கேள்விக் குறி!

முழுத்தீர்வு கிடைக்கும் வரை, தமிழர்கள் தன்மானம் உள்ளவர்களாக, சுதந்திரப் புருஷர்களாக, தம்மைத் தாமே கயமாக ஆளும் இனமாக மாறும் வரை உரிமைப் போராட்டங்கள் தொடர வேண்டும்

அதற்கு ஒற்றுமை தேவை. மனப் பலம் தேவை. அற்ப சலுகைகளை நாடாத தெளிவு நிலை அவசியம்

1986 ஜூலை — 23 இல் அவற்றை மனதில் இருத்தி, உட்சண்டை போடாது, சலியாது உறுதியுடன் உழைக்க திடசங்கற்பம் செய்வோமாக.

'ஹெலி' நதியில் வீழ்ந்தது 23 பேர் பலி

மனுகுவா, ஜூலை 23

நிக்கராகுவ நாட்டு இராணுவ ஹெலிக் கொப்டர் ஒன்று சென்ற சனிக்கிழமை நதியொன்றில் வீழ்ந்தது.

இதனால் அதில் பயணம் செய்த 24 பேர்களில் ஒருவர் தவிரமற்றவர்கள் உயிரிழந்தனர்.

நிக்கராகுவாவின் கிழக்குப் பகுதியில் வெள்ள அபாயத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் அப்புறப்படுத்தும் பணியில் ஈடுபட்டிருந்த ஹெலிக்கொப்டர் ஒடுவானில் இயந்திரக் கோளாறு காரணமாக நதியில் வீழ்ந்தது. (இ-ஒ)

மரண தண்டனை

கம்ருன், ஜூலை 22

மேற்கு ஆபிரிக்க நாடான கம்ருனில் கடந்த அக்டோபர் மாதம் ஜனாதிபதி ஹிரியோவின் அரசை புரட்சி மூலம் கவிழ்க்க முயன்ற அறுவருக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டது. இவர்களில் முன்னாள் உப ஜனாதிபதியும் அடங்குவர். (ஒ)

அணுகுண்டு தயாரிப்பில் இந்தியா தனது நிலையை தெளிவுபடுத்தவேண்டும்

அத்வானி கோரிக்கை விடுக்கிறார்

புதுடில்லி, ஜூலை.22

அணு ஆயுதம் தயாரிக்கும் நிலையில் பாகிஸ்தான் இருப்பதாக அமெரிக்காவில் வெளியாகியுள்ள செய்திகள் அடுத்து இந்தியா அணுகுண்டு தயாரிப்பில் தனது நிலையைத் தெளிவுபடுத்த வேண்டும்.

இவ்வாறு பாரதீய ஜனதா கட்சித் தலைவர் திரு எல். கே. அத்வானி கோரிக்கை விடுத்துள்ளார்.

அண்மைக் காலத்தில் சீனர்கள் ஆறுதடவைகளுக்கும் அதிகமாக இந்திய எல்லைக்குள் ஊடுருவக் செய்துள்ளனர்.

இதுபற்றி நாடாளுமன்றத்திலும் மக்களிடமும் இந்திய அரசு தெரிவிக்கத் தவறி விட்டது.

இவ்வாறு அத்வானியின் குற்றச்சாட்டு அமைந்தது

பாகிஸ்தான் பிரதமர் நெருக்கடி நிலை ஏற்படும் வரை இந்தியா பார்த்துக் கொண்டிருப்பதை அனுமதிக்க முடியாது.

எனவே இந்தியா தனது நேச நாடான ரஷ்யாவுடன் சேர்ந்து அணு ஆயுதத் தயாரிப்பிலும் நாட்டின் பாதுகாப்பிலும் அதிககவனஞ் செலுத்த வேண்டும் என்றும் அத்வானி கேட்டுக் கொண்டார் (இ-ஒ)

சமாதானமும் ஒற்றுமையும் வலுப்படுத்தப்பட வேண்டும்

இந்தியா- நேபாளம் கருத்து

காட்மாண்டு, ஜூலை 22

தெற்காசிய பிராந்திய ஒத்துழைப்பு நாடுகள் சமாதானத்தையும் ஒற்றுமையையும் தமது பிராந்தியங்களில் வலுப்படுத்த வேண்டும் என இந்தியாவும் நேபாளமும் கேட்டுக் கொண்டுள்ளன.

நேபாளத் தலை நகரான காட்மண்டுவில் இந்திய ஜனாதிபதி ஜானி தெயில் சிங்கைக் கௌரவித்து மன்னர் பிரேந்திரா அளித்த விருந்தில் இரு தலைவர்களும் பேசினார்கள்.

காலத்தின் சோதனைக்கு ஈடுகொடுக்க பஞ்சசீலக் கொள்கைகளின் அடிப்படையில் எல்லா நாடுகளுடனும் நட்புறவு கொள்ள இந்தியா உறுதிபூண்டுள்ளது.

இவ்வாறு இந்திய ஜனாதிபதி தெரிவித்தார்.

மண்டல சார்பற்ற இயக்கத்தின் நல்லமை நாடு என்ற முறையில் சமாதானம் சகவாழ்விற்காக இந்தியா தொடர்ந்து குரல் எழுப்பி வருவதாக மன்னர் பிரேந்திரா குறிப்பிட்டார்.

நேபாள விஜயத்தை மேற்கொண்டிருக்கும் இந்திய ஜனாதிபதி மிகவும் தொண்மையான அரண்மனை ஹனுமான் டாக்கோவையையும் பார்வையிட்டார் (ஒ)

காமன்வெல்த் பகிஷ்கரிப்பு: தென் ஆபிரிக்க காங்கிரஸ் பாராட்டு

கேப்டவுன், ஜூலை 22

காமன் வெல்த் விளையாட்டுப் போட்டிகளை பகிஷ்கரிக்க பல நாடுகள் முடிவு செய்ததை தென் ஆபிரிக்க காங்கிரஸ் பாராட்டி உள்ளது.

40 ஆண்டுகளுக்கு முன் தென் ஆபிரிக்காவுடனான எல்லாப் பொருளாதார உறவுகளையும் இந்தியா கண்டித்தது ஒரு முன்மாதிரியான செயலாகும்.

இதனால் இனவெறி பிடித்த அரசை சர்வதேச அரங்கில் இருந்து ஒதுக்கி விடுவதற்கு வழி காட்டியாக இந்தியா அமைந்தது.

இவ்வாறு தென் ஆபிரிக்க காங்கிரஸ் வெளிவிட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-ஒ)

அரச குடும்ப திருமணம் இன்று

லண்டன் ஜூலை 23

இரண்டாவது எலிஸபெத் மகாராணியின் இரண்டாவது மகனும், போர்க்காலத்து யுத்தத்தில் முன்னணியில் செயலாற்றிய கடற்படை வீரருமான இளவரசர் அன்றுகிற்கும் சாரா பேர்சறுக்கும் இன்று புதன் கிழமை லண்டனில் விமரிசையாகத் திருமணம் நடைபெறும் (ஒ)

ஸ்பானிய பிரதமர் நம்பிக்கை

மாட்ரிட், ஜூலை.22

ஸ்பானிய பிரதமர் திரு பெலிவி கங்காலோ தமது நாட்டிக் பயங்கரவாதத்திற்கு எதிரான போராட்டத்தில் அரசாங்கம் வெற்றி பெறும் என்று நம்பிக்கை தெரிவித்தார். (ஒ)

செய்திச் சரம்

சிமெந்து மீன்படகு

இந்தியாவில் மத்திய மீன்வளம் மற்றும்தொழிலில் பயிற்சி நிலையினால் உருவாக்கப்பட்ட சரத்சந்திரா என்னும் பெயர்கொண்ட முதலாவது சிமெந்து மற்றும் இரும்பினாலான மீன் பிடிப்படகு கொச்சின் துறைமுகத்தில் மிதக்க விடப்பட்டது.

*

கலவரங்களால் கவலை

இந்தியாவில் இனக்கலவரங்கள் அடிக்கடி நடப்பது குறித்து லோகசபை ஆழ்ந்த கவலையைத் தெரிவித்துள்ளது.

இத்தாலியில் புதிய அரசு?

இத்தாலியில் கடந்த 24 நாட்களாகத் தொடரும் அரசியல் நெருக்கடிகளைத் தீர்க்கும் முகமாக ஜனாதிபதி கோஸிகா, கோஷலிஸ்ட் கட்சியின் தலைவரும், முன்னாள் பிரதமருமான திரு காரக்லியை புது அரசாங்கம் ஒன்றை உருவாக்குமாறு பணித்துள்ளார்.

*

அணுசக்தி புதிய பிரிவு

ரஷ்யாவில் அணுசக்திப் பிரிவிற்குப் பொறுப்பாய் புதிய அமைச்சு ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது

*

தொடரும் பகிஷ்கரிப்பு

கிரானடா, சேசெல்ஸ் ஆகிய நாடுகளும் காமன்வெல்த் விளையாட்டுக்களை பகிஷ்கரிக்க முடிவு செய்துள்ளன.

நிராகரிப்பு

தென் ஆபிரிக்காவிற்கு அமெரிக்கத் தூதுவராக நியமனம் பெறவிருந்த பிரபல கறுப்பு இன கிரிக்கட் வீரர் ஒருவர் அப்பதவியை நிராகரித்துள்ளார்.

*

கென்னடியின் மகள் திருமணம்

முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஜோன். எப். கென்னடியின் மகளான கரோலின் (27 வயது) நியூயோர்க் பிரபல ஒலியான எட்வின் கொல்ல் பேக் (41 வயது) என்பவரைத் திருமணம் செய்தார்.

*

10 லட்சம் ஈரானியர் பலி

கடந்த ஆறுவருடமாக நீடித்து வரும் ஈராக்— ஈரானிய யுத்தத்தில் சுமார் 10 லட்சம் ஈரானிய சிப்பாய்கள் பலியாயுள்ளதாக ஈராக் தெரிவித்தது

* (இ-ஒ)

மீண்டும் நாகஸோனி

ஜப்பானின் புதிய பிரதமராக மீண்டும் நாகஸோனி தெரிவாகியுள்ளார். கடந்த இருவாரங்களுக்கு முன் நடந்த தேர்தல்களில் நாகஸோனி தன் தலைமையான கூட்டணி அமோக வெற்றி பெற்றிருந்தது தெரிந்ததே.

தபாலின் வேகம்

இத்தாலி நாட்டிக் உதவி என்ற ஊரிலிருந்து மிலான் நகருக்குப் போடப்பட்ட கடிதம் கிடைக்க 23 ஆண்டுகள் பிடித்துள்ளன. ஆனால் இரு நகரங்களும் 240 மைல் தொலைவில் அமைந்துள்ளன.

வெளி உலகில்

தமிழர் பிரதேசங்கள் ஓர் அமைப்பாகவேண்டும்

அதனை எப்படி அழைத்தாலும் சரி

இணைப்புக் கோரிக்கை குறித்து அமிர்

அரசு கூட்டணி பேச்சுக்கள் இரண்டாவது வாரமாகத் தொடர்ந்து நடைபெறுகின்றன.

பேச்சுக்கள் தொடங்கி ஒருவாரம் சென்ற பின்னர் கூட்டணிச் செயலதிபர் திரு. அ. அமிர்தலிங்கம் கூட்டணியின் நிலைப்பாடு குறித்து கொழும்பில் இருந்து வெளியாகும் அரசுக் கட்டுப்பாட்டில் உள்ள டெய்லிநியூஸ் நாளிதழுக்கு அளித்த பேட்டியின் முதலாவது பகுதி இன்று பிரசுரமாகின்றது.

பேட்டி கண்டவர்: ரி சபாரத்தினம்.

கேள்வி: ஜனாதிபதியுடனும் அமைச்சர்களுடனும் கடந்த ஒரு வாரகாலமாகப் பேசுகின்றீர்கள் - பேச்சுக்களின் தன்மை முன்னேற்றம் பற்றிக் கூறுவீர்களா ?

அமிர்: கடந்த ஞாயிறு (ஜூலை18) தொடக்கம் வெள்ளிக்கிழமை (18-7-86) வரை ஜனாதிபதியுடனும் அமைச்சர் காமினி திஸநாயகவுடனும் ஐந்து சுற்றுப் பேச்சுக்கள் நடத்தி விட்டோம். எமது பேச்சுக்கள் அடிப்படை அம்சங்கள் பற்றி அமைந்தன. எந்த அம்சம் குறித்தும் தீர்க்கமான முடிவுக்கு நாம் வந்ததாகக் கூறும் நிலையில் நான் இல்லை.

கேள்வி: பேச்சுக்கள் ரகசியமாக இருக்கவேண்டும் என்பதை நாமும் உணர்கின்றோம். இருந்தும் மேலோட்டமாக எந்தப்பிரச்சினைகள்பற்றி நீங்கள் ஆராய்ந்தீர்கள் என்று கூறமுடியுமா?

அமிர்: பேச்சுக்களின் பற்றிய விவரங்களை நாம் வெளியிட முடியாது. ஆனால் மேலோட்டமாகக் கூறுவதானால் காணி பற்றி அதிகாரப் பகிர்வு பற்றியே நாம் இதுவரை பேசினோம். இவ்வளவு நாளும் நாம் அதைத் தான் செய்தோம்.

கேள்வி: இப்பேச்சுக்கள் எவ்வளவு காலத்துக்குத் தொடரும் என்று எதிர்பார்க்கிறீர்கள்?

அமிர்: இந்த நடைமுறை சிறிது காலம் தொடரும் அடிப்படை அம்சங்கள் குறித்து நாம் பேச்சுக்கள் மூலம் தீர்வுக்கு வந்தால், ஏனையவை குறித்து வேகமாச்செயற்படலாம். உண்மை என்னவென்றால் அடிப்படை அம்சங்கள் குறித்து இன்னும் நாம் ஒரு முடிவுக்கு வரவில்லை.

கேள்வி: அடிப்படை அம்சங்கள் என்றால்.....

அமிர்: உதாரணத்துக்கு அதிகாரப் பகிர்வு இடம்பெறும் மட்டம் பற்றிகூடிலும் ஒரு முடிவு காணப்படவில்லை. இது எம்மைப் பொறுத்த வரையில் அடிப்படை விஷயம்.

கேள்வி: மாகாண மட்டத்தில் அதிகாரப் பகிர்வு என்று அரசு தீர்மானித்துவிட்டது. அரசியல் கட்சிகள் மாநாடும் மாகாண மட்ட அரசியல் அதிகாரப் பகிர்வைத் தான் ஆதரிக்கின்றது. ஆனால் நீங்கள் வடக்கு, கிழக்கு மாகாணங்களின் இணைப்பை விரும்புகிறீர்கள்?

அமிர்: [illegible] நாம் மாகாணங்களின் இணைப்பை, அல்லது தொடர்பை விரும்புவதாக பிழையாகக் கணிக்கப்படுகின்றது.

தமிழ்பேசும் மக்கள் பெரும்பான்மை மாகாணமாக வாழும் தமிழ்ப் பிரதேசங்களை உள்ளடக்கிய தான அமைப்பே நாம் கேட்பது. இந்த அமைப்பை மாகாணம் என்று அழைத்தாலும்சரி, மாநிலம் என்று அழைத்தாலுஞ்சரி வேறு எந்த மாதிரி அழைத்தாலும் சரிதான்.

இப்படி ஒரு அமைப்பைத் தராது பிரச்சினைக் குத் தீர்வுகாண முடியாது; தமிழர்களின் அபிலாஷைகளைத்திருப்தி செய்வதும் முடியாது.

கேள்வி: தமிழ் பெரும்பான்மைப் பகுதிகளைக் கொண்ட புதிய மாகாணம் ஒன்றை உருவாக்கக்கூடியதாக வடக்கு கிழக்கு மாகாண எல்லைகளை மாற்றம் செய்வது, கிழக்கைத் திருப்திப்படுத்துமா?

அமிர்: நிச்சயமாக கிழக்கு மாகாணத்தின் தற்போதைய எல்லைகள் மாற்றி அமைக்கப்பட்டு பெரும்பான்மைத் தமிழ் பேசும் பகுதிகளை வடமாகாணத்துடன் இணைந்து புதிய வடகிழக்கு மாகாணம் ஒன்றை உருவாக்குவதன் மூலம் தற்போதைய பிரச்சினைக்கு முடிவு காணமுடியும் என்று என்னுகின்றேன்.

அப்படியான பகுதிகள் எவை, எவ்வளவு எல்லை என்பது மிகவும் கவனமாக பரிசீலனை செய்ய வேண்டியிருக்கும்.

(தொடரும்)

ஔவையார் மொழி

குறள்:

கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்டு
என் ஆற்றும் கொல்லோ உலகு

பொருள்:

இந்த உலகத்துள் தமக்கு உதவும் மழைக்கு என்ன கைம்மாறு செய்கின்றனர்? மழை போன்றவர் செய்யும் உதவிகளும் கைம்மாறு வேண்டாதவை

இந்திய மீனவர்களுக்கு நினைவுச் சின்னம்

வேலணை, ஜூலை 23

வேலணை தெற்கு துறையூர் கடற்கரைத் துறைமுகத்தில் ஒன்பது இந்திய மீனவர்களுக்கும் வேலணை கடற்றொழிலாளர் அமைப்பினால் ஞாபகார்த்தச் சின்னங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

இறந்தவர்களது சடலங்கள் அனைத்தும் வேலணைப்பகுதி கடற்கரையில் ஒதுங்கியிருந்தது குறிப்பிடத்தக்கது (இ)

பேராதனை சென்ற பஸ்

யாழ்ப்பாணம், ஜூலை23

ஞாயிற்றுக்கிழமை கண்டி பேராதனைப் பல்கலைக்கழகத்துக்கு விசேஷ பஸ் சேவை ஒன்று சென்றது

யாழ் பல்கலைக் கழக மாணவர்கள் பிரதிநிதியே சமாக இந்த பஸ்ஸை ஒழுங்கு செய்திருந்தனர்.

ஞாயிற்றுக்கிழமை காலை ஆறு மணி அளவில் யாழ்ப்பாணத்தில் இருந்து கண்டி பேராதனைப் பல்கலைக் கழகம் நோக்கி இந்த பஸ் புறப்பட்டது.

இவர்களுக்கான பஸ் ஒழுங்கினை யாழ் அரசாங்க அதிபர் ஏற்பாடு செய்திருந்தார். (இ-10)

வர்த்தகர் கடத்தப்பட்டார்

யாழ்ப்பாணம், ஜூலை 23

யாழ்ப்பாணத்தில் வர்த்தகர் ஒருவர் கடத்திச் செல்லப்பட்டார். (இ-10)

விமான நிலையத்தில் மீன் ஏற்றுமதியாளர் ஒருவருக்கு ஏற்பட்ட அனுபவம்

கொழும்பு, ஜூலை23

குண்டு வெடிப்புச் சம்பவத்தைத் தொடர்ந்து கட்டுநாயக்கா விமான நிலையத்தில் அமுல் நடத்தப்படும் புதிய பாதுகாப்பு நடவடிக்கைகள் 'உயிருடன் மீன் ஏற்றுமதி'யில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு பெருத்த சிரமத்தைக் கொடுத்துள்ளது.

சிரமம் கொடுத்த ஒரு சம்பவம் வருமாறு:

'உயிருடன் மீன் ஏற்றுமதி செய்யும் ஏற்றுமதியாளர் கடைசி நிமிடத்தில் விமானத்தில் ஏற்ற மீன்களைக் கொண்டு சென்றார்.

ஏயர் லங்கா விமான அதிகாரி ஏற்றமறுத்து விட்டார்.

மீன் வகைகளைக் கொண்டு வந்தவரோ, 'நீர் அரசின் ஏற்றுமதிக் கொள்கையை உடைக்கச் சதி செய்கிறீர்'- என்று சத்தமிட்டுச் சொன்னார். அப்போது ஏயர்லங்கா அதிகாரி பாதுகாப்பு நடவடிக்கைதான் முக்கியம். நீர் இன்று பிந்தி வந்து விட்டீர். கொண்டுபோய் மீன் வகைகளைப் பொரியும்'—என்றார்.

ஏற்றுமதியாளர் மீன் வகைகளைத் திருப்பி எடுத்துச் சென்றார். (உ-எ)

தமிழரும்முஸ்லிம்களும் இங்கு சகோதரர்கள்

நூலக திறப்பு விழாவில் ஆணையாளர்

யாழ்ப்பாண முஸ்லிம் மக்களும் தமிழ் மக்களோடு சேர்ந்து அரசினால் துன்பப்படுத்தப் பட்டுவருகிறார்கள்.

நினைவும் நகரில் நடக்கும் ஷெல் தாக்குதல்கள் துப்பாக்கிப் பிரயோகங்களில் முஸ்லிம்களும் கொல்லப்படுகிறார்கள்.

எனவே தமிழ் மக்கள் தங்களுடன் சேர்ந்து இன்னலுறும் முஸ்லிம் சகோதரர்களின் வேதனைகளை உணர்ந்து அவர்களையும் எமது மக்களாக மதித்து வாழவேண்டும்.

கடந்த வாரம் நாவாந்துறையில் யாழ்ப்பாண நூலகத்தின் ஐந்தாவது கிளையை திறந்து வைத்து உரை யாற்றுகையில் யாழ்-மாநகரசபை ஆணையாளர் திரு சி. வி. கே. சிவஞானம் இப்படிச் சொன்னார்.

ஆணையாளர் தமது உரையில்,

கல்வியில் கூட தமிழ் மக்கள் அரசினால் எந்த அளவு பாதிக்கப்படுகிறார்களோ அதே அளவு முஸ்லிம் மக்களும் பாதிக்கப் படுகிறார்கள்—என்றார்.

திரு சு நேசையா உரையாற்றும் போது—

தற்பொழுது வடபகுதியில் நிலவும் குழ்நிலைகளில் நூலகங்கள் பரவலாகத் திறக்கப்படுவது வரவேற்கக் கூடிய விடயம் என்றார். (உ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* வர்ணப் புகைப்படப் பிரதி ஒன்று ரூ. 5/-
* Processing Free
* விற்பனை வர்ண புகைப்படக் கருவிகள்

KODAIC - SAKURA-TUDOR

ஆர்த்தி ஜுவல்லர்ஸ்

111, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

தொலைபேசி: 23628

உதயன்

23 07 1986 புதன்கிழமை

உங்களை அழைக்கின்றது

ஆர்த்தி ஜுவல்லர்ஸ்

* தரமான வர்ணப் புகைப்படப் பிரதிகள்
* கம்பியூட்டர் முறையில்
* குறைந்த செலவில்
* நிறைந்த சேவையில்

பெற்றுக்கொள்ள நாடுங்கள்

தமிழ்மொழி மாநிலத்தை முஸ்லிம்கள் எதிர்க்கவில்லை

முன்னணியின் தலைவர் கூறுகிறார்

கொழும்பு, ஜூலை 23

தமிழ்மொழி மாநிலக் கோரிக்கைக்கு கிழக்கு மாகாண முஸ்லிம் மக்கள் எதிரானவர்கள் அல்லர்.

இப்படி கிழக்கு மாகாண முஸ்லிம் முன்னணித் தலைவர் ஜனாப். எம். ஐ. எம். மொஹிதீன் தெரிவித்துள்ளார்.

தற்போது நடக்கும் பேச்சுக்கள் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான சிறந்த சந்தர்ப்பம்.

மும் கோரிக்கைக்கு சரியான மாற்றாக ஒன்று கிடைக்காத வரை போராடுவோம் என்று போராளிகள் கூறுகின்றனர்.

அவர்கள் உள்ளத்தில் இருப்பது ஒரு மொழி மாநில அமைப்பே. கிழக்கு மாகாண முஸ்லிம்கள் இதை எதிர்ப்பார் என்று கூறி இக்கோரிக்கையை சிலர் எதிர்த்து வந்தவர். கிழக்கு மாகாண முஸ்லிம்கள் இக்கோரிக்கைக்கு எதிர்ப்பானவர்கள் அல்லர்.

தமிழ்மொழி மாநில அமைப்பினுள் முஸ்லிம்களுக்குத் தனியான கவுன்ஸில் தேவை. இன்று நாம் எதிர்நோக்குவது தமிழர் பிரச்சினை அல்ல; இனப் பிரச்சினையே

எமது யோசனைகளின்படி அம்பாறை மாவட்டத்தில் உள்ள கல்முனை, சம்மாந்துறை, பொத்துவில் தேர்தல் தொகுதிகளை உள்ளடக்கியதாக முஸ்லிம்களுக்கு எனத் தனி மாகாண சபை அமைய வேண்டும்.

இச்சபையில் தொடர்பற்ற முஸ்லிம் கிராமங்களான காத்தான்குடி, ஏறாவூர், ஒட்டமாவடி, மூதூர், கிண்ணியா, மூதூர், எருக்கலம்பிட்டி ஆகியவையும் சேரலாம்.

இருந்தும் முஸ்லிம்களுக்கு தனி மாகாண சபைதான் உகந்தது என்று கட்டணி உணர்கின்றது.

இப்படி அவர் சொன்னார். (உ-எ)

முஸ்லிம்கள் நேற்று நடத்திய ஊர்வலம்

யாழ்ப்பாணம், ஜூலை 23

யாழ் முஸ்லிம் மக்கள் நேற்று ஊர்வலம் ஒன்றை நடத்தினர்.

சென்ற மாதம் 24 ஆம் திகதி நடைபெற்ற குண்டுவீச்சு படுகொலைச் சம்பவத்தை கண்டித்தும்—[illegible] நீதியான நியாயமான தீர்வை வழங்குமாறு கோரியுமே மேற்படி ஊர்வலம் நடைபெற்றது

சுமார் 200 பேர்வரை யில் கலந்து கொண்ட இந்த ஊர்வலம் ஒஸ்மானியா பள்ளி வாசலில் இருந்து ஆரம்பித்து ஐந்துசந்தி, மணிக்கூண்டுச் சந்தி, கே. கே. எஸ் வீதி ஆகியவற்றினூடாக ஐயனார் கோயிலடிவரைச் சென்றது.

அங்கு சென்ற ஊர்வலக்காரர்கள் போராளிகளின் முகாம் ஒன்றுக்கு அருகே சென்று முற்றுகையிட்டு பெரும் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

எனினும் போராளிகள் இந்த விடயத்தில் தலையிட்டதை அடுத்து இந்த ஊர்வலம் கலைந்து சென்றது.

யாழ் நகரில் நேற்று ஒரு சில கடைகள் காணியில் மூடப்பட்டிருந்தன. (உ-10-5)

'ராக்கிங்'கை கைவிட . . .

(1ம்- பக்கத் தொடர்ச்சி)

மாணவர் மத்தியிலான வன்முறை அட்டகாசங்களாக நிலைப்படுத்தப்பட்டுள்ளது. இன்று ராக்கிங் என்ற போர்வையில் இடம் பெறுவது முற்றுமுழுதான வன்முறை அட்டகாசங்களே.

ராக்கிங் என்ற போர்வையில் ஒரு சில தீயசக்திகள் தம் பாலியல் சீரியான வக்கிரங்களைத் தீர்த்துக் கொள்ள முயல்கின்றன.

கடந்தமுறை ராக்கிங் என்ற போர்வையில் இடம்பெற்ற மோசமான சம்பவங்களை விசாரணை செய்ததில் இருந்து இதனை ஆதார பூர்வமாக நிரூபிக்க முடிந்துள்ளது

எனவே கடந்த காலங்களில் இடம்பெற்ற இந்த மோசமான சங்கிலி முடியாத செயற்பாடுகளால் மாணவ, மாணவிகள் உடலியல், உளவியல் ரீதியாக கடுமையாக பாதிப்புக்குள்ளாக்கப் பட்டுள்ளனர்

இந்த அட்டகாசங்களை தடுக்க பகிரங்கக் கருத்திலும் பல்வேறு முயற்சிகள் காலத்திற்கு காலம் மேற்கொள்ளப்பட்டன.

பல்கலைக்கழக மொழிகளும் பொதுமக்களும் பாதிக்கப்பட்ட பல்கலைக்கழக மாணவர்களும் இதற்கெதிரான பிரசாரங்களை வெளியிட்டு இதனைக் கட்டுப்படுத்த வேண்டி கூறியுள்ளது

மேலும் குற்றவாளிகளாக காணப்பட்டோர்க்கு பல்கலைக்கழக நிர்வாகத்தினால் தண்டனைகள் வழங்கப்படும்போது அவற்றை பல்வேறு அட்டவடித்தனமான செயற்பாடுகள் மூலம் வெற்றி கொண்டு குற்றவாளிகள் தப்பித்துக் கொள்வதும் —

ராக்கிங் நடவடிக்கைக்கு எதிரான மாணவர்கள் சக மாணவர்களால் பலமுறுத்தலுக்கு உள்ளாக்கப்படுவதும் நீண்ட காலமாகத் தொடர்வதாலே—

ஒரு சமூகப் பொறுப்புக்குரிய உணர்வோடு ராக்கிங் என்ற பெயரில் இடம்பெறும் அடாவடித்தனங்களை தடுக்க வேண்டிய கட்டாயமான நிலை எமக்கேற்படுகிறது.

இம்முறையும் இந்த கலாசாரமிகமோசமான பண்பற்ற - எமது கலாசாரத்தை சீரழிப்பதுமான - செயற்பாடுகள் இம்பெறின் அவற்றை ஸ்தாபன ரீதியில் எதிர்கொள்வதும் -

அவற்றிற்கு எதிரான நடவடிக்கை எடுக்க வேண்டிய தூர்ப்பாக்கிய நிலையும் எமக்கேற்படும்

எனவே ராக்கிங் நடவடிக்கையில் ஈடுபடும் மாணவர்கள் இதனை உணர்ந்து செயற்படுவர்கள் என்று நாம் நம்புகிறோம் - இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது

பிரிவுபசார விருந்து

யாழ்ப்பாணம், ஜூலை 23

வடமாநில மூன்னாள் கல்விப் பணிப்பாளர் திரு எம். சிவியாம் பிள்ளைக்கு சகல்வித்திணைக்களத்தால் இன்று பிரிவுபசார விருந்து அளிக்கப்படுகிறது.

நிலக்கண்ணி..

(1ம்- பக்கத் தொடர்ச்சி)

வைத்து டீஸ் நிலக்கண்ணி வெடிக்க தாக்குதலுக்குள்ளாக்கப்பட்டது

வவுனியா டிப்போவுக்குச் சொந்தமான இப் பஸ்ஸில் சாரதி ஒரு தமிழர் என்று சொல்லப்படுகிறது. படுகாயமடைந்தவர்களில் (ஒருவர்) ஒருவர் "நெடுங்கேணிச் சம்பவத்திற்கு பதிலடி" என்ற நோட்டீஸ் அப்பகுதியில் நேற்று ஒட்டப்பட்டிருந்தது

இச் சம்பவத்தைத் தொடர்ந்து மாமடுவ வகுதியி. உத்தியோகப் பற்றற்ற ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டது

நேற்றுக் காலை இதனால் வவுனியா நகரம் வெறிச்சோடிக் காணப்பட்டது. சன நடமாட்டமே இல்லை (இ-எ-6)

உதைபந்தாட்டம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கத்திகள், கொல்லுகள் இருந்தன

இதனையடுத்து வைமானத்திலே கைலப்பு ஏற்பட்டது.

அல்வேலையில் ஓர் அணியின் ஆட்டவீரர் ஒருவரும் கையில் கத்தியைத் திருந்ததாகத் தெரியவருகிறது

மத்தியஸ்தரைத் தாக்க முயற்சி

ஒரு சந்தர்ப்பத்தில் போட்டியை ஏற்பாடு செய்து, அதனைக் கண்காணித்து வந்த கல்வி திணைக்களத்தைச்சேர்ந்த வட்டாரக் கல்வி அதிகாரி (உடற்பயிற்சி) திரு. வி. கணேசலிங்கத்தையும்—

ஆட்ட மத்தியஸ்தரையும் சிலர் தாக்க முற்பட்டனர்

இதனையடுத்து இளைஞர் அமைப்பு ஒன்று வைமானத்தில்தலையிட்டு கைலப்பை முடிவுக்கு கொண்டு வந்தது.

சிலர் அங்கப்பகுதி [illegible] படும் சிலர் இளைஞர் அமைப்பினால் பிடிக்கப்பட்டு விசாரிக்கப்பட்டனர். அவர்களில் சிலரை நையப் புடைக்கப்பட்டதாகவும் தெரியவருகிறது

நேற்றைய கைலப்பில் யாழ் இந்துக் கல்லூரி வினையாட்டு மைதான உதவியாளரும், வீரர் ஒருவரும் மாணவர்கள் சிலரும் காயமடைந்தனர்.

விளையாட்டு மைதான உதவியாளர் யாழ் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார்.

அண்மையில் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரிக்கும் கல்லூரிக்கும் ஸ்ரந்தவ ரோதயாக் கல்லூரிக்கும் இடையில் நடைபெற்ற உதை பந்தாட்டப் போட்டியொன்றும் கைலப்பில் முடிவுற்றது என்பதும்—

இந்த ஆட்டத்தின் போது மத்தியஸ்தர் கடுமையாகத் தாக்கப்பட்டு [illegible] குற்றவர்கள் என்று [illegible]

இருவருக்கு புலிகள் மரண தண்டனை

யாழ்ப்பாணம், ஜூலை 23

பருத்தித்துறையிலும் அம்பனிலும் தமிழீழ விடுதலைப் புலிகளினால் நேற்று இருவருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது.

பருத்தித் துறையில் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டவர் மகேஸ் அபிராமிநிதி சபையின் முன்னாள் இயக்குநர்களில் ஒருவரான இராசதுரை சாமி என்பவர்.

இவர் முன்பு லண்டனில் உள்ள இலங்கைத் தூதரகத்தில் முக்கிய பதவி வகித்தவர் என்று கூறப்படுகிறது

போராளிகள் பதிரிய தலைவர்களை அரசுக்கும் இராணுவத்துக்கும் கொடுத்தார் என்று இவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது

அடம்பனில் மரண தண்டனை விதிக்கப்பட்டவர் அரியரத்தினம் அரியராஜா என்பவர் ஆவார்.

சமீபத்தில் அடம்பனில் நடந்த சம்பவங்களின் போது போராளிகளைக் காட்டிக் கொடுத்தாக இவர்மீது குற்றம் சாட்டப்பட்டது. (இ-119)

யாழ் முஸ்லிம் . . .

(1ம்- பக்கத் தொடர்ச்சி)

தாக்கப்பட்டோ மேற்கொண்டது

காதி அபூபக்கர் வீதியில் நுழைந்த இந்தக் கோஷ்டியினர் அங்கு இரண்டு கடைகளையும், இரண்டு வீடுகளையும் அடித்து பலத்த சேதப்படுத்தினர்.

கடைகளில் இருந்த பணத்தையும், பொருள்களையும் இவர்கள் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்

கடைகளுக்கு முன்னால் உள்ள வீதியில் மாமுடை ஒன்று கிழித்து கொட்டப்பட்டுக்கிடந்தது.

பூஸ் மக்காம் ஒழுங்கையில் நுழைந்த இக் கோஷ்டியினர் அங்கு ஒரு வீட்டை அடித்துச் சேதப்படுத்தியது—வீட்டில் இருந்த பெறுமதி மிக்க பொருள்களையும் அடித்து நொருக்கி

வீதி...

(1ம்- பக்கத் தொடர்ச்சி)

பட வேறு மோட்டார் வாகனங்கள்கூட போக்குவரத்துச் செய்யமுடியாத சூழ்நிலை உருவாகியிருப்பதாகவும் புகார் செய்யப்படுகிறது.

எனவே பொது நலன் கருதி இந்த விடயத்தில் ஒரு கட்டுப்பாடான கொள்கையைக் கடைப்பிடிக்க வேண்டியது அவசியமாகும்.

இதுவரை அமைக்கப்பட்ட தடைகளில் எமது முன் அங்கீகாரம் பெறாதவற்றை உடனடியாக அகற்றிவிடுமாறு அவற்றை அமைத்தவர்களைக் கேட்டுக் கொள்கிறோம். இல்லாவிடின் அவற்றுக்கான அங்கீகாரத்தைக் கோரி உடன் எமக்கு எழுதினால் அதைப் பரிசீலித்து எந்தளவுக்கு வேகக் கட்டுப்பாடு தேவை என்பதை நிர்ணயித்து அந்தவகையான ஒரு தடை அமைப்பை மாநகரசபை மன்றம் அங்கீகரிக்கும்.

இவ்வாறு அங்கீகரிக்காத தடைகளை அகற்றவோ அல்லது மூடிவிடவோ நடவடிக்கையெடுக்கப்படும் என்பதுடன் இந்த விடயத்தில் எமக்குப் புகார் செய்த பல வேறு பொதுமக்களையும் விநாயகமூர்த்தியையும் வேண்டிய ஒத்துழைப்பு வழங்குமாறும் கேட்டுக் கொள்கிறோம்.

மேலும் விபரங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

காரோடு எரிக்கப்பட்ட இளைஞர்

திருகோணமலை, ஜூலை 23

திருகோணமலை, அலஸ் தோட்டப் பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை சிருடையினரின் துப்பாக்கிப் பிரயோகத்துக்கு செல்வராசா தர்மகுலசிங்கம் என்ற இளைஞரும் உயிரிழந்தார்

அந்த நேரத்தில் அப்பகுதியால் வந்த டாக்ஸி ஒன்று வழிமறிக்கப்பட்டது எப்படியோ டாக்ஸியை ஓட்டி வந்தவர் தப்பிவிட்டார்

ஆனால் துப்பாக்கிப் பிரயோகத்தில் உயிரிழந்த தர்மகுலசிங்கத்தின் சடலம் டாக்ஸியுடன் போடப்பட்டதுடன் டாக்ஸியோடு சடலம் எரிக்கப்பட்டது

உயிரிழந்த இளைஞர் முன்னிப் பொரத்தனையைச் சேர்ந்தவர் நிவாவெவியில் இருந்து மரக்கறிகளை வாங்கி சைக்கிளில் கொண்டு போய் திருகோணமலையில் விற்று வந்தார் (உ-எ-150)

ஜனாதிபதி செய்தி

ராகிஸ்தான் ஜனாதிபதி லியா உல் ஹக்கிற்கு ஜனாதிபதி ஜெயவர்த்தன விசேட செய்தி ஒன்றை அனுப்பிவைத்திருக்கிறார்

கடந்த ஞாயிறு பாகிஸ்தானுக்குப் புறப்படுச் சென்ற அமைச்சர் எம். எச். முஹம்மது ஊடாக இந்த விசேட செய்தியை ஜனாதிபதி அனுப்பி வைத்தார்.

பலாலியில் பொதுசனத் தொடர்பு அதிகாரி

யாழ்ப்பாணம், ஜூலை 23

யாழ் குடாநாட்டிலுள்ள பொதுமக்களின் குறைகளைக் கவனிப்பதற்காக பலாலி பாதுகாப்பு முகாமில் உள்ள கேணல் சி. ஜே. அபயரட்ன நியமிக்கப்பட்டுள்ளார்.

அவருடன் பொதுமக்கள் தொடர்பு கொள்ளும்படி பலாலி இராணுவ முகாம் பிரிகேடியர் எச். எவ். ரூசிங்க கேட்டுள்ளார்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:- பாதுகாப்பு நல்லிணக்கச் செயலகம் (யாழ்), இராணுவ முகாம், பலாலி, வயாவிளான்.

தொலைபேசி இலக்கம்: யாழ்: 23380, 24451 கொழும்பு: 33611. (இ-5)

பேச்சும்...

(1ம்- பக்கத் தொடர்ச்சி)

சிங்கள மக்கள் மத்தியில் உள்ள தீவிர சக்திகள் ஒன்று திரண்டு பெரும் கிளர்ச்சியில் ஈடுபடுவர்.

மாகாணசபை மட்டத்தில் அதிகாரப் பகிர்வு நடைபெறுதலே முதலில் ஏற்று இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும். பின்னர் படிப்படியாக ஏனையவற்றைப் பார்த்துக்கொள்ளலாம்

இப்போது இக் கோரிக்கையை வற்புறுத்தினால் சகல முயற்சிகளும் தோல்வி காணும்

இப்படி திரு. விஜய குமாரணதுங்க சொன்னார். (அ-ர)

ரயில் சேவை மீண்டும் அ'புரம் வரை

கொழும்பு ஜூலை 23

நீண்ட காலத்தின் பின்னர் கடந்த ஞாயிற்றுக்கிழமை முதல் வவுனியா வரை நடைபெற்ற யாழ்தேவி ரயில் சேவை மீண்டும் இன்று முதல் இடைநிறுத்தி வைக்கப்படும்.

வடபகுதிக்கான ரயில் சேவைகள் யாழ் முன்னர் மாதிரி அனுராதபுரம் வரையே நடைபெறும்.

இப்படி ரயில்வே திணைக்களம் நேற்று அறிவித்தது. (உ-எ)

ஊர்வலத்தின்..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கடைகள் உடைக்கப்பட்டதும் அமைதியாக நீதியான தீர்வுக்கு காத்திருந்த பாதிக்கப்பட்ட மக்களின் நியாயபூர்வமான உணர்வை முஸ்லிம் பொதுமக்கள் மத்தியில் சீர்குலைக்கும் செயல்களாக அமைந்துவிட்டன.

எது எவ்வாறாயினும் யார் இச்செயல்களை புரிந்திருந்தாலும் இவை கண்டிக்கப்பட வேண்டியவையே.

இச் சம்பவங்களில் ஏற்கனவே குற்றவாளிகளாக சந்தேகிக்கப்படும் நபர்களின் குடும்பங்களுக்கும் அப்பாவி பொதுமக்களின் சொத்துக்களுக்கும், உடைமைகளுக்கும் சேதம் ஏற்படுத்தியமை மிகவும் கவலைக்குரியசெயலாகும்.

—இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது (உ)

வியாபாரம்பெருக விளம்பரம் செய்க

நல்லூர் ப. நோ. கூ. சங்கம்

வெற்றிடம்

பதவி: காசாளர் - சம்பளத்திட்ட இல 306 : 11

மேற்படி பதவிக்கான விண்ணப்பங்கள் சங்க எல்லைப் பரப்பிலுள்ள ஆண், பெண் இரு பாலாரிடமிருந்தும் கோரப்படுகின்றன விண்ணப்பிக்க விரும்புவோர் சங்கக் காரியாலயத்துடன் தொடர்பு கொண்டு விவரங்களையும், விண்ணப்பப் பத்திரத்தையும் ரூபா 5.00 செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்ப முடிவு திகதி: 5-8-1986

பொது முகாமையாளர்,
நல்லூர் ப. நோ. கூ. சங்கம்,
திருநெல்வேலி.

ROCK

Engineers & Contractors
Water Supply & Building Works

குழாய்க் கிணறுகள்

(இயந்திரங்கள் மூலம்)

யாழ்ப்பாணக் குடா நாட்டுக்குள் உள்ள எந்த இடத்திலும் சரி

24 மணித்தியாலங்களுக்குள்

குழாய்க் கிணற்றை அமைத்துத் தண்ணீரும் பெற்றுத் தருவோம்.

தோட்டத் தேவையாகவும் இருக்கலாம். வீட்டுத் தேவையாகவும் இருக்கலாம். எமது ஒரு குழாய்க் கிணற்றிலிருந்து குறைந்தது 5 ஏக்கர் நிலத்திற்கு பயிர் செய்யலாம்.

குழாய்க் கிணறுகள் அமைப்பதற்கு கஷ்டமாக இதுவரை இருந்த இடங்களாகிய சாவகச்சேரி, மீசாலை, கொடிகாமம், கச்சாய், குடமியன், மிருசுவில், பளை போன்ற இடங்களிலும் நாங்கள் வெற்றிகரமாக அமைத்துக் கொடுத்திருக்கிறோம்

தொடர்பு கொள்ளுங்கள்

ரொக் எஞ்ஜினியர்ஸ்

பருத்தித்துறை வீதி, கோப்பாய்.

5 ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

அமரர்
வேலுப்பிள்ளை அம்பலவாணர்
— விருதங்க வித்துவான் —

தோற்றம்: 11—10—1927 மறைவு: 19—07—1981

திதி 23—07—1986

அன்பின் பிறப்பிடமாய்த் திகழ்ந்து— அயனி போற்ற வாழ்ந்து—கலை வளர்த்த கவிமணி சங்கரி! நீர் எம்மை விட்டு எங்கு சென்றீர்? நீங்கள் மறைந்து ஐந்து ஆண்டுகள் ஆனாலும் எம் நெஞ்சைவிட்டு உமது எண்ணம் அகலாது

நாச்சிமார் கோவிடி நாதமணியே! உம் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்

அன்பு மக்கள்
ஓம் ஸ்ரீ, ரகு, ராம, ஜெயம், சந்தானலக்ஷ்மி, சரஸ்வதி

நாச்சிமார் கோவிடி,
யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சார நிலைய வீதி, இரண்டாவது ஒழுங்கை 10-ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்லிக்கேஷன்ஸ் (பிரைவேட்) லிமிடெட், கிராப்பனத்தாராள் அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது திகதி 23—07—1986.

Printed and Published by Uthayan Publications (Private) Ltd, 15 Second Lane, Power House Road. JAFFNA.

Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka Under Number QJ 60 NB6.

Digitized by Noolaham Foundation. | noolaham.org | aavanaham.org